


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 155 | 4 Pages | 3.1.2026 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 155 | 4 பக்கங்கள் | 3.1.2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
**இடங்கண்ட பின்னல் லது**

**விளக்கம்:**
முற்றுகை செய்வதற்கு ஏற்ற இடத்தைக் கண்டபின் அல்லாமல் எச் செயலையும் தொடங்கக்கூடாது, பகைவரை இகழவும் கூடாது.

## மேகாலயா, பாட்னா உயர் நீதிமன்றங்களுக்கு புதிய தலைமை நீதிபதி நியமனம்



புதுடெல்லி, ஜன.3

மேகாலயா, பாட்னா உயர் நீதிமன்றங்களுக்கு புதிய தலைமை நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேகாலயா தலைமை நீதிபதியாக ரேவதி பிரசாந்த் மோகித் டேரே மற்றும் பாட்னா தலைமை நீதிபதியாக சங்கம் குமார் சாஹூ நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை ஜனாதிபதி திரவுபதி முர்மு பிறப்பித்துள்ளார்.

மேகலாயா தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள ரேவதி பிரசாந்த் மோகித் டேரோ மும்பை ஐகோர்ட்டில் நீதிபதியாக உள்ளார். அதேபோல, சங்கம் குமார் சாஹூ ஒடிசா நீதிமன்றத்தில் நீதிபதியாக உள்ளார். மேகாலயா தலைமை நீதிபதியாக உள்ள சோமென் சேன் கேரள ஐகோர்ட்டிற்கு மாற்றப்பட்டுள்ளார்.

## தெலுங்கானாவில் டிசம்பர் மாதம் மதுபான விற்பனை மூலம் ரூ.5,102 கோடி வசூல்



ஐதராபாத், ஜன.3

தெலுங்கானாவில் மதுபான விற்பனை 2025 டிசம்பரில் இதுவரை இல்லாத உச்சத்தை எட்டியுள்ளது. டிசம்பர் மாதத்தில் மட்டும் அங்கு மதுபான விற்பனை மூலம் ரூ.5,102 கோடி வசூலாகியுள்ளது. இது வழக்கமான மாதாந்திர சராசரியை விட மிக அதிகமாகும்.

ஆண்டு இறுதி மற்றும் பண்டிகைக் கால விடுமுறையையொட்டி மதுபான விற்பனை அதிகரித்ததாக கூறப்படுகிறது. ஆண்டின் இறுதி நாளான டிசம்பர் 31 அன்று, மதுபான விற்பனை ரூ.352 கோடியைத் தொட்டது. டிசம்பர் 30 அன்று பதிவான ரூ.375 கோடியுடன் சேர்த்து, 48 மணி நேரத்தில் ரூ.727 கோடிக்கு மேல் வருவாய் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சர்ச்சை பேச்சு: மன்னிப்பு கேட்ட மத்திய பிரதேச பாஜக மந்திரி



இந்தூர், ஜன.3

இந்தியாவின் தூய்மையான நகரம் என 8வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகரம் மத்தியபிரதேச மாநிலத்தில் உள்ள இந்தூர். இங்கு, கழிவுநீர் கலந்த குடிநீரை பருகி தற்போதுவரை 10க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். 100க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். சுத்தமான நகரம் என பெயர் வாங்கிய நகரில் சுகாதார சீர்கேட்டால் நிகழ்ந்த இந்த உயிரிழப்புகள் தொடர்பாக மத்தியபிரதேச மந்திரியும் அந்த தொகுதியின் பாஜக எம்.எல்.ஏ.வுமான கைலாஷ் விஜயவர்கியாவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த மந்திரி கைலாஷ் விஜயவர்கியா, '' பயனற்ற கேள்விகளை கேட்காதீர்கள்'' என ஆவேசமாக கூறியுள்ளார். மேலும் 'கண்டா' என்றும் கூறியுள்ளார். இந்தி மொழியில் 'கண்டா' என்ற சொல் பேச்சு வழக்கில் குப்பை, ஒன்றுமில்லை என்பதை குறிக்க பயன்படுத்தப்படுகிறது.

இருவருக்கும் இடையே நடந்த இந்த வாக்குவாதம் தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. 10 பேர் இறந்தது ஒரு விஷயமா? என்ற தொனியில் மந்திரி பேசியது பெரும் சர்ச்சையையும் ஏற்படுத்தியது. இந்நிலையில் தனது பேச்சுக்கு பா.ஜனதா மந்திரி மன்னிப்பு கோரினார். கைலாஷ் விஜயவர்கியா சர்ச்சை கருத்தை தெரிவிப்பது இது முதல்முறை அல்ல. பலமுறை சர்ச்சைக்குரிய வார்த்தைகளை கூறிவிட்டு அதற்கு மன்னிப்பும் கேட்டுள்ளார். எனவே அவர் ராஜினாமா செய்ய வேண்டும் என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

# பேரறிஞர் அண்ணா, கலைஞர் நினைவிடங்களில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை

சென்னை, ஜன.3

புத்தாண்டையொட்டி தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில், "உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளுக்கும், அனைத்து மக்களுக்கும் எனது உளமார்ந்த இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

ஒரு கையில் வாளேந்தி உரிமை காத்தும், மறு கையில் கேடயமேந்தி மக்கள் நலன் காத்தும், ஜனநாயகப் போர்க்களத்தில் நிற்கும் நமக்கு வெற்றி ஒளிவீசும் நம்பிக்கை தரும் புத்தாண்டாக மலர்கிறது 2026! புத்தாண்டுத் தொடக்கம் முதலே 'சமத்துவம் பொங்கட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!' எனக் கோலமிட்டு திராவிடப்_பொங்கல் களைகட்டட்டும்! உடன்பிறப்புகள் நடத்தும் விளையாட்டுப் போட்டிகள், கலை, இலக்கிய நிகழ்வுகள் என திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவதற்கான தொடக்கமாக இந்த புத்தாண்டைக் கொண்டாடுவோம்!" என்று பதிவிட்டிருந்தார்.




இந்நிலையில் புத்தாண்டையொட்டி மெரினா கடற்கரையில் உள்ள பேரறிஞர் அண்ணா, கலைஞர் நினைவிடங்களில் இன்று இரவு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "தலைவர் கலைஞரின் நினைவுகளோடு புத்தாண்டு இரவில்..." என்று பதிவிட்டுள்ளார்.

# அரசு ஊழியர்களுக்கு பொங்கல் போனஸ்: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை

தமிழக அரசு துறைகளில் பணியாற்றும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்கள், ஆசிரியர்களுக்கு ரூ.3 ஆயிரம் பொங்கல் போனஸ் வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கை: அரசுத் திட்டங்களை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்த்திட அயராது பணியாற்றிவரும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை கொண்டாடி மகிழ 20242025ம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு வழங்க 183 கோடியே 86 லட்சம் ரூபாய்நிதிஒதுக்கீடுசெய்யப்பட்டு உள்ளது.



இதனால், 9 லட்சத்து 90 ஆயிரம் பேர் பயனடைவார்கள். 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூ.3 ஆயிரம் மிகை ஊதியம் வழங்கப்படும். தொகுப்பூதியம், சிறப்புகால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் 20242025ம் நிதியாண்டில் மாத குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாகப் பணிபுரிந்து சில்லரைச் செலவினத்தின் கீழ் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழு நேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் மிகை ஊதியம் வழங்கப்படும்.

a'சி' மற்றும் 'டி' பிரிவு ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், கிராம உதவியாளர்கள் மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசாக வழங்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# பழங்குடியினர் மக்களுக்கு புத்தாண்டு பரிசுகள் - இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் நலத்திட்ட உதவி

திருப்பூரை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில், அனைத்து தரப்பு மக்களுக்கும் தொடர்ந்து பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்து வழங்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு, ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டத்திற்குட்பட்ட பவானிசாகர் வனச்சரகம் கூலித்துறைப்பட்டி நந்திபுரம் பகுதியில் வசித்து வரும் பழங்குடியினர் மக்களை இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் நேரில் சந்தித்து உதவிகள் வழங்கப்பட்டது. அப்பகுதியில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு ரூ.2.5 லட்சம் மதிப்பிலான 26 கிலோ அரிசி மூட்டைகள், ஐந்து கிலோ கோதுமை மாவு, மளிகைப் பொருட்கள், வேஷ்டி, சட்டை, புடவைகள், குழந்தைகளுக்கான துணிகள் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு இனிப்பு வகைகள் வழங்கப்பட்டன.



மேலும், அப்பகுதி குழந்தைகள் பள்ளிக்குச் சென்று வர போதிய வாகன வசதி இல்லை என்பதை அறிந்த இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம், குழந்தைகளுக்காக வாகனம் வாங்கித் தருவதாக உறுதி அளித்தது. இந்த அறிவிப்பு அப்பகுதி மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிகழ்வில், இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் இந்திராசுந்தரம், செயலாளர் ராஜா முகமது, வனத்துறை அலுவலர் செந்தில்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் முடிவில், பழங்குடியினர் மக்களுடன் இணைந்து கேக் வெட்டி வாழ்த்துக்களை பகிர்ந்து, ஆங்கில புத்தாண்டை உற்சாகமாக கொண்டாடினர். இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனத்தின் சமூக சேவை, பொதுமக்களிடையே பாராட்டை பெற்றுள்ளது.

# தூய்மைப் பணியாளர்களின் கண்ணீரே திமுக அரசை அழிக்கும்: நயினார் நாகேந்திரன்



சென்னை,, ஜன.3

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

சமத்துவம் பொங்கட்டும் என சமூக வலைதளத்தில் பேசிவிட்டு, சமூகநீதியை வீசியெறிந்து, சர்வாதிகாரப்போக்கில் ஈடுபடும் பாசிச முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களே!

புத்தாண்டை வாணவேடிக்கையுடன் உலகமே கொண்டாடிய வேளையில், அறவழியில் போராடிய தூய்மைப் பணியாளர்களை எந்தவொரு அடிப்படை வசதியுமின்றி இருளில் அடைத்து வைத்ததோடு, நள்ளிரவில் திக்குத் தெரியாத இடத்தில் இறக்கிவிட்டு கொடுமைப்படுத்தி இருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது.

பணிநிரந்தரம் செய்வோம் என்று கூறிய உங்கள் தேர்தல் வாக்குறுதி எண் 285 தான் மறந்துவிட்டது என்றால், தூய்மைப் பணியாளர்கள் மனிதர்கள் என்பது கூடவா உங்கள் திராவிட மாடல் அரசிற்கு மறந்துவிட்டது?

ஒன்றை நியாபகம் வைத்துக் கொள்ளுங்கள். புத்தாண்டில் திக்குத் தெரியாமல் தூய்மைப் பணியாளர்களைத் தவிக்கவிட்ட பாவமே, திமுக அரசைதிக்குத் தெரியாமல் துரத்தியடிக்கும்! தூய்மைப் பணியாளர்களின் கண்ணீரே திமுக அரசை அழிக்கும்.என தெரிவித்துள்ளார்.

# புதுகோட்டையில் 4ம் தேதி கூட்டணி தலைவர்களுடன் அமித்ஷா பிரசாரம்



சென்னை, ஜன.3

தமிழகம் வருகை தரும் அமித்ஷா கூட்டணியில் சில கட்சிகளை இணைப்பதற்கான வேலைகளை தொடங்குவார் என பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளது.

2026 சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் 4 மாதங்களே உள்ள நிலையில், தமிழகத்தில் அனைத்து கட்சிகளும் தேர்தலுக்கு தயராகி வருகின்றன. ஆளுங்கட்சியான திமுக வரும் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைக்கும் வகையில் வியூகம் வகுத்து செயல்பட்டு வருகிறது.இந்தநிலையில் அதிமுகவுடன் கூட்டணி அமைத்துள்ள பாஜக இந்த தேர்தலில் எப்படியாவது தமிழ்நாட்டில் திமுகவை வீழ்த்துவதுடன், வலுவாக காலூன்றும் வகையிலும் செயல்பட்டு வருகிறது. அதற்கேற்றவாறு சமீபத்தில் மதுரையில் தென்மாவட்ட பாஜக நிர்வாகிகளை மத்திய மந்திரி அமித்ஷா சந்தித்து பேசினார். அதேபோல் தமிழ்நாடு சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள பாஜக தலைமை மத்திய மந்திரி பியூஷ் கோயலை களம் இறக்கி உள்ளது.

பிரதமர் மோடி மற்றும் உள்துறைமந்திரிஅமித்ஷா ஆகியோரின் ஆலோசனையின்படி அதிமுக பாஜக கூட்டணியை பலப்படுத்தும் முயற்சியில் பியூஷ்கோயல் ஈடுபட்டு உள்ளார். இந்த கூட்டணியில் பிற கட்சிகளை சேர்ப்பதற்கான பணிகளும் திரைமறைவில் நடைபெற்று வருகிறது.இந்த பரபரப்பானசூழலில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா 2 நாள் சுற்றுப்பயணமாக வருகிற 4ம் தேதி தமிழகம் வருகிறார். தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கடந்த அக்.12ம் தேதி மதுரையில் தொடங்கி தமிழகம் முழுவதும் மேற்கொண்டுள்ள தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம் என்ற தேர்தல் ப்ரிஅசார யாத்திரை நிறைவு விழா புதுக்கோட்டையில் நடைபெறுகிறது.

இதில் உள்துறை மந்திரி அமித்ஷா கலந்து கொள்கிறார். இதற்காக டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் 4ம் தேதி திருச்சி வருகிறார். பின்னர் அங்கிருந்து புதுக்கோட்டக்கு சென்று நயினார் நாகேந்திரனின் தேர்தல் பிரசார நிறைவு விழாவில் பங்கேற்கிறார். இதற்காக நத்தம் பண்ணை ஊராட்சி பள்ளத்திவயல் பகுதியில் 60 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு அங்கு பிரமாண்ட மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணிகள் நடந்து வருகிறது. இதில் கலந்து கொள்ள சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி, தமிழ்மாநில காங்கிரஸ் தலைவர் ஜி. கே.வாசன், ஐ.ஜே.கே கட்சி தலைவர் பாரிவேந்தர், புதிய நீதி கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம் உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்களுக்கு பாஜக சார்பில் முறைப்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நயினார் நாகேந்திரனின் பிரசார பயண நிறைவு விழாவுடன் தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் ப்ரிஅசார பொதுக்கூட்டமாகவும் நடைப்றும் இந்த பொதுக்கூட்டத்தில் கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

புதுக்கோட்டை நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு திருச்சி வரும் அமித்ஷா இரவு கலெக்டர் அலுவலகம் அருகே உள்ள கோர்ட் மாரியாட் ஓட்டலில் தங்கி ஓய்வு எடுக்கிறார். பின்னர் மறுநாள் (5ந்தேதி ) ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்கிறார். அதன் பின்னர் திருச்சியில் நடைபெறும் 'நம்ம ஊரு மோடி ஜி' பொங்கல் விழாவில் கலந்து கொள்கிறார். 1000 பெண்கள்கலந்துகொண்டு பொங்கலிடும் இந்த நிகழ்ச்சி மன்னார் புரம் நான்கு ரோட்டில் அமைந்து உள்ள ராணுவ மைதானத்தில்நடைபெறுகிறது. இதற்கான பந்தல் கால் நடும் நிகழ்ச்சி இன்று காலை நடைபெற்றது. இதில் அக்கட்சியின் மாநில பொதுச் செயலாளர் கருப்பு முருகானந்தம் கலந்து கொண்டார்.

அமித்ஷா பங்கேற்கும் இந்த பொங்கல் விழாவில் ஆயிரம் பெண்கள் பங்கேற்க உள்ளனர். இரண்டு நாள் சுற்றுப்பயணமாக தமிழகம் வருகை தரும் அமித்ஷா, அ.தி.மு.க. மற்றும்பா.ஜ.க.கூட்டணியில் சில கட்சிகளை இணைப்பதற்கான வேலைகளை தொடங்குவார் என பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளது. கூட்டணியை உறுதி செய்யாமல் இருக்கும் தே.மு.தி.க., அ.தி. மு.க. தொண்டர்கள் உரிமை மீட்பு கழக ஒருங்கிணைப்பா ளர் ஓ.பன்னீர் செல்வம், அம்மா மக்கள் முன்னேற்றக்கழகபொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர் களை சந்திக்கவும் வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

# கொலை முயற்சி வழக்கில் வாலிபர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது




திருநெல்வேலி ஜன.3

திருநெல்வேலி மாவட்டம், ஏர்வாடி பகுதியில் கொலைமுயற்சி, கொலைமிரட்டல் உள்ளிட்ட வழக்கில் ஈடுபட்ட திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், வன்னியன்குடியிருப்பு, மேல தெருவை சேர்ந்த அண்ணபாண்டி மகன் தமிழரசன் (வயது 25) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவர் கொலை முயற்சி, கொலைமிரட்டல், வழிப்பறி மற்றும் அடிதடி போன்ற குற்றச்செய ல்களில் தொடர்ந்து ஈடுபட்டு பொதுமக்களை அச்சுறுத்தி வருவதாக ஏர்வாடி போலீஸ் இன்ஸ்பெக்டர் செல்வி கவனத்திற்கு வந்தது.

இதனையடுத்து அவர், அந்த வாலிபர் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன்பேரில் மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின் பேரில் தமிழரசன், தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளை மத்திய சிறையில் நேற்று முன்தினம் அடைக்கப்பட்டார்.

# மயிலாப்பூர் சாலையில் திடீரென ஏற்பட்ட பள்ளம் வாகன ஓட்டிகள் அதிர்ச்சி



சென்னை, ஜன.3

சென்னை மயிலாப்பூர் ஆர்.கே.மடம் சாலையில் திடீரென 5 அடிக்கு பள்ளம் ஏற்பட்டுள்ளது. சாலையில் ஏற்பட்ட திடீர் பள்ளத்தால் வாகன ஓட்டிகள் அதிர்ச்சி அடைந்தனர். சென்னையில் நேற்று பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்த நிலையில், இன்று திடீரென சாலையில் பள்ளம் ஏற்பட்டுள்ளது.

கழிவு நீர் குழாயில் ஏற்பட்ட உடைப்பால் பள்ளம் ஏற்பட்டதா? அல்லது வேறு காரணமாக என்பது குறித்து போக்குவரத்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பள்ளம் ஏற்பட்ட சாலையில் தடுப்புகள் அமைத்து, ஒருவழி பாதையாக போக்குவரத்து மாற்றிவிடப்பட்டுள்ளது. பள்ளத்தை சரி செய்வதற்கான பணியில் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

# தேர்தலில் திமுகவுக்கு முதன்மை எதிர்க்கட்சி அதிமுகதான் உதயநிதி ஸ்டாலின்



சென்னை, ஜன.3

அதிமுக தற்போது வவலுவிழந்து இருந்தாலும் அக்கட்சிதான் எங்கள் முதன்மை எதிர்க்கட்சியாக நாங்கள் பார்க்கிறோம் என துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

நாங்கள் பாஜகவையும் அதன் அனைத்து பிடீம்களையும் எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம். தமிழகத்தில் மதசார்பற்ற சக்திகளை பலவீனப்படுத்த பாஜக அனைத்து வழிகளையும் பயன்படுத்தும் என்பதை அறிந்தே இருக்கிறோம். தமிழக மக்கள் பாஜகவின் சதியை அறிந்து அதை தோற்கடிப்பர். தேசிய ஜனநாயக கூட்டணியில் முடிவுகள் அனைத்தும் டெல்லியில் எடுக்கப்பட்டு தமிழக கட்சிகளின் மீது திணிக்கப்படுகிறது. நீண்ட காலமாக எங்கள் பிரதான போட்டியாளராக அதிமுக இருந்தாலும், இப்போதைய நிலையில் பலம் வாய்ந்த போட்டியாளர்யாரும் இருப்பதாக நான் கருதவில்லை. பலவீனமான நிலையில் அதிமுக இருந்தாலும், அதைத்தான் பிரதான எதிர்க்கட்சியாக நாங்கள் பார்க்கிறோம். அவர்கள் தான் எங்களது போட்டியாளர். இவ்வாறு அவர் கூறினார்

# வீட்டில் கணவர் இல்லாத நேரத்தில் உறவினருடன் மனைவி உல்லாசம்...மதுரையை பரபரப்பாக்கிய கள்ளக்காதல்



மதுரை, ஜன.3

மதுரையை சேர்ந்தவர் தேவாஎன்றரித்தீஷ்(வயது 27). கூலித்தொழிலாளி. இவர், குடும்பத்துடன் கோவை மாவட்டம் கிணத்துக்கடவு அருகே தாமரைக்குளத்தில் உள்ள அரசமரத்து விநாயகர் கோவில் வீதியில் வசித்து வந்தார். இவரது மனைவி இந்திராணி(26). இவர்களுக்கு 3 வயதில் ஆண்குழந்தை உள்ளது.

கடந்த 26ந்தேதி தேவா திடீரென மாயமானதாகவும், இதில் சந்தேகம் உள்ளதாகவும் அவரது தாயார் சுசீலா, கிணத்துக்கடவு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார்வழக்குப்பதிவு செய்து தேவாவை தேடி வந்தனர்.

இந்தநிலையில் தேவாவின் மனைவி இந்திராணி நேற்று கிணத்துக்கடவு போலீஸ் நிலையத்திற்கு வந்து கணவரை நான் தான், உறவினா் உள்ளிட்டோருடன் சேர்ந்து கொன்றதாக தெரிவித்து சரணடைந்தார். இதையடுத்து இந்திராணியை கைது செய்து கொலைக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தினர். அதில் திடுக்கிடும் தகவல்கள் வெளியானது.

அதாவது இந்திராணிக்கும், அவரது சித்தப்பாவான கரூரில் ஓட்டலில் வேலை பார்த்து வந்த வினோத்குமார்(41) என்பவருக்கும் கள்ளக்காதல் இருந்து வந்துள்ளது. வீட்டில் தேவா இல்லாத நேரம் பார்த்து அடிக்கடி வினோத்குமார் வந்து இந்திராணியை தனிமையில் சந்தித்து உல்லாசமாக இருந்துள்ளனர். இதை அறிந்த தேவா, 2 பேரையும் கண்டித்துள்ளார்.

இந்தநிலையில் கள்ளக்காதலுக்கு இடையூறாக இருப்பதாக கருதி கணவர் தேவாவை இந்திராணி மற்றும் வினோத்குமார் ஆகியோர்தீர்த்துக்கட்ட முடிவு செய்தனர். அதன்படி கடந்த 28ந்தேதி இரவு வீட்டில் தேவா இருந்தார். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்திராணி, வினோத்குமாருக்கு தகவல் தெரிவித்து வரவழைத்தார்.

அதன்படி அவரும், சிலருடன் வீட்டிற்கு வந்தார். இந்திராணி, வினோத்குமார் மற்றும் அவருடன் வந்தவர்கள் தேவாவிடம் தகராறு செய்தனர். பின்னர் கத்தியால் தேவாவை கழுத்து உள்ளிட்ட பகுதிகளில் சரமாரியாக குத்தி கொலை செய்தனர்.

பின்னர் நள்ளிரவில் கரூரில் இருந்து தனியார் ஆம்புலன்சை வரவழைத்து அதில் தேவா உடலை கரூர் பகுதியில் உள்ள ரெயில்தண்டவாளத்திற்கு எடுத்து சென்று ரெயில் முன்பு பாய்ந்து தற்கொலை செய்ததாக நம்ப வைக்கும் வகையில் உடலை போட்டுவிட்டு சென்றனர்.

இதையடுத்து இந்திராணி மதுரையில் உள்ள தனது தாயார் வீட்டுக்கு சென்றுவிட்டார்.

மறுநாள் காலை ரெயில்வே போலீசார் தண்டவாளத்தில் தேவாவின் உடலைகைப்பற்றிரெயில் மோதி இறந்திருக்கலாம் என கருதி கரூர் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இதற்கிடையில் தேவாவை காணவில்லை என்ற புகாரின் பேரில் கிணத்துக்கடவு போலீசார் தாமரைக்குளம் பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர்.

அப்போது அந்த பகுதிக்கு ஒரு ஆம்புலன்ஸ் வந்து சென்றதை கண்டறிந்தனர். ஆம்புலன்ஸ் குறித்து அந்த பகுதியில் விசாரணை செய்வதை கேள்விபட்ட இந்திராணி, கொலையை கண்டுபிடித்து போலீசார் கைதுசெய்துவிடுவார்கள், அதற்கு முன்பு நாமே சரணடைந்து விடலாம் என நினைத்து போலீஸ் நிலையத்தில் சரண் அடைந்தார். அவரை போலீசார் கைது செய்தனர்.

கைதான இந்திராணியை, கொலை நடந்த தாமரைக்குளத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினர். மேலும் இந்திராணி, கணவரை கொன்றது குறித்து நடித்து காண்பித்தார். தலைமறைவான வினோத்குமார் உள்ளிட்டோரை போலீசார் தேடி வருகின்றனர். கள்ளக்காதல் விவகாரத்தில் தொழிலாளியை மனைவி கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இடைநிலை மற்றும் பகுதிநேர ஆசிரியர்களுக்கு விடியல் எப்போது? ஆதவ் அர்ஜூனா பேச்சு



சென்னை, ஜன.3

தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூனா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது,

சென்னையில் ஏழாவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகிறார்கள் இடைநிலை ஆசிரியர்கள். புத்தாண்டான இந்த நாளில்கூட அவர்களை, குறிப்பாக பெண் ஆசிரியர்களை இப்படி ரோட்டில் முழங்காலிட்டும், பிற வகைகளிலும் போராட வைத்து வேடிக்கை பார்ப்பதுதான் இந்த ஆட்சியின் லட்சணமா? முதல்அமைச்சர் , அமைச்சர்கள் என நீங்கள் மகிழ்ச்சியுடன்புத்தாண்டைக் கொண்டாடி வரும்போது, உங்களுக்கு வாக்களித்த இடைநிலை ஆசிரியர்கள், பகுதிநேர ஆசிரியர்கள், தூய்மைப் பணியாளர்கள் என அனைத்து தரப்பு மக்களும் சொல்லமுடியாத வேதனைகளோடு போராடி வருகிறார்கள்.

போராடும் ஆசிரியர்களை திமுக அரசு பலவந்தமாகக் கைது செய்திருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. 'சம வேலைக்கு சம ஊதியம்' என்ற முழக்கத்தை ஏந்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இடைநிலை மற்றும் பகுதிநேர ஆசிரியர்களுக்கு ஒரு விடியல் எப்போது? தேர்தல் வாக்குறுதியில் அவர்களை நம்பவைத்து ஏமாற்றிவிட்டு, இன்று அதற்காக அவர்கள் போராடும் உரிமையைக் கூட சர்வாதிகாரமாக ஒடுக்கி வருகிறது திமுக அரசு.

இடைநிலை மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் உட்பட அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு உடனே நிறைவேற்ற வேண்டும். அனைத்து தரப்பு ஊழியர்களையும் அடிப்படை உரிமைக்காக அன்றாடம் போராட வைத்துக்கொண்டிருக்கும் இந்த அரசுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.என தெரிவித்துள்ளார்.

# நெல்லையில் 1.1 கிலோ கஞ்சா பறிமுதல்: வாலிபர் கைது

திருநெல்வேலி ஜன.3

திருநெல்வேலி மாவட்டம், தாழையூத்து பகுதியில் சப்இன்ஸ்பெக்டர் அருண்ராஜா தலைமையிலான காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது காவல்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தாழையூத்து அருகேசந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த தாழையூத்தை சேர்ந்த அந்தோணி எட்வின் ஜான்சன் (வயது 22) என்பவரை சோதனை செய்த போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்ககூடிய 1 கிலோ 140 கிராம் கஞ்சாவை விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்தது தெரிய வந்தது.

இதுகுறித்து போலீஸ் இன்ஸ்பெக்டர் ஹேன்றி அமலாதாஸ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு, அந்தோணி எட்வின் ஜான்சனை கைது செய்தார். மேலும் அவரிடம் இருந்து 1 கிலோ 140 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்து உரிய சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

# 5ந் தேதி தேமுதிக மாவட்ட செயலாளர்கள் கூட்டம்



சென்னை, ஜன.3

தமிழகத்தில் வரும் ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. கடந்த முறை (2021ம் ஆண்டு) அதிமுக கூட்டணியில்இடம்பெற்றிருந்த தேமுதிக, இந்த முறை இன்னும் கூட்டணியை முடிவு செய்யவில்லை.

பொங்கல்பண்டிகைக்கு பிறகு கூட்டணி குறித்த அறிவிப்பை தேமுதிக தலைமை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், தேமுதிக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் ஜனவரி 5ந் தேதி (திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு கோயம்பேட்டில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது. இந்தக் கூட்டத்திற்கு கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமை தாங்குகிறார்.

கூட்டத்தில், சட்டசபை தேர்தலில் தேமுதிக யாருடன் கூட்டணி? என்பது இறுதி செய்யப்பட இருப்பதாக கூறப்படுகிறது. மேலும், வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகள் எவை? என்பதுகுறித்தும்மாவட்ட செயலாளர்களிடம்கருத்து கேட்கப்பட உள்ளதாம்.

# கல்பாக்கம் அணு ஆராய்ச்சி மையத்தின் புதிய இயக்குநராக ஸ்ரீகுமார் பிள்ளை பதவியேற்பு




சென்னை, ஜன.3

கல்பாக்கத்தில் உள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தின்(IGCAR) இயக்குநராக பதவி வகித்து வந்த சி.ஜி. கர்ஹாத்கர் 31ந்தேதி(நேற்று) ஓய்வு பெற்றார். இதையடுத்து அந்த மையத்தின் புதிய இயக்குநராக ஸ்ரீகுமார் பிள்ளை இன்று பதவி யேற்றுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த தலைமைத்துவ மாற்றம், கல்பாக்கம் அணு ஆராய்ச்சி மையத்தின் கவனத்தை இந்தியாவின் அணுசக்தி இலக்குகளுடன் இணைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோழிக்கோடு பல்கலைக்கழகத்தில் வேதியியல் பொறியியலில் பி. டெக் பட்டம் பெற்ற பிள்ளை, 1990ம் ஆண்டு மும்பையில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்தில் (BARC) சேர்ந்தார். அங்கு பல்வேறு பதவிகளில் 35 ஆண்டுகள் பணியாற்றினார். டிராம்பேயில் உள்ள புளூட்டோனியம் ஆலையில் ஷிப்ட் சார்ஜ் பொறியாளராக தனது வாழ்க்கையைத் தொடங்கி, மூத்த செயல்முறை பொறியாளர் மற்றும் மேற்பார்வையாளராக உயர்ந்தார்.

செலவழித்த எரிபொருள் மறுசுழற்சி, கதிரியக்க கழிவு மேலாண்மை, எரிபொருள் சுழற்சி செயல்பாடுகள், திட்ட மேலாண்மை, கொள்முதல், பாதுகாப்பு மதிப்பீடுகள் மற்றும் ஒழுங்குமுறை இணக்கம் ஆகியவற்றில் ஸ்ரீகுமார் பிள்ளைக்கு 30 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ‘வேறு மாநிலத்தில் வசிப்பவர்கள் அங்குள்ள பிராந்திய மொழியை கற்றுக்கொள்ள வேண்டும்’ மோகன் பகவத்

ராய்ப்பூர், ஜன.3

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய பா.ஜ.க. அரசு, பிராந்திய மொழிகளுக்கு பதிலாக இந்திக்கு முன்னுரிமை அளிக்க முயற்சிப்பதாக பல்வேறு மாநில கட்சிகள், குறிப்பாக தென்னிந்தியாவைச் சேர்ந்த கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் கருத்து தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக சத்தீஷ்கார் மாநிலம் ராய்ப்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் பேசிய அவர், “குறைந்தபட்சம் நம் வீடுகளுக்குள்ளாவது, நாம் நம் தாய்மொழியில் பேசவேண்டும்.வேறொரு மாநிலம் அல்லது பிராந்தியத்தில் வசிப்பவர்கள், அந்த மாநிலம் அல்லது பிராந்தியத்தின்மொழியை கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் அனைத்து மொழிகளும் இந்தியாவின் தேசிய மொழிகள் தான். அவை அனைத்திற்கும் சமமான முக்கியத்துவம் உண்டு” என்று தெரிவித்தார்.

# ஈரோடு-சம்பல்பூர் சிறப்பு ரெயிலில் கூடுதல் பெட்டி இணைப்பு

சென்னை, ஜன.3

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஒடிசா மாநிலம் சம்பல்பூரில் இருந்து ஈரோடு வரும் சிறப்பு ரெயிலில் (வண்டி எண்.08311), வருகிற 7ந்தேதி முதல் 28ந்தேதி வரையிலும், மறுமார்க்கமாக ஈரோடில் இருந்து சம்பல்பூர் செல்லும் சிறப்பு ரெயிலில் (08312), வருகிற 9ந்தேதி முதல் 30ந்தேதி வரையிலும் 3வது வகுப்பு ஏ.சி. பெட்டி 1, படுக்கை வசதி பெட்டி 1 இணை த்து இயக்கப்பட உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருப்பரங்குன்றம் விவகாரம்: மத்திய மந்திரியின் பேச்சுக்கு கி.வீரமணி கண்டனம்



சென்னை, ஜன.3

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மதுரைக்கு வந்த மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான், ''திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் தீபம் ஏற்றுவதைத் தடுப்போர் முட்டாள்கள்'' என்று சற்றும் பொறுப்பற்ற முறையிலும், பண்பற்ற தன்மையிலும் பேசியிருப்பது கண்டனத்துக்குரியது.

திருப்பரங்குன்றத்தில் வேண்டுமென்றே மதக் கலவரத்தைத் தூண்டி, வரவிருக்கும் தேர்தலில் 'வாக்கு வங்கி'யாக அதனை மாற்றிவிடலாம் என்று கனவு காண்பவர்களுக்கு பதில் சொல்வதற்கு ஒரு சாதாரண பகுத்தறிவுக் குடிமகனே போதும்.

வழக்கமாக நடைபெற்றுவரும் தீபம் ஏற்றும் நிகழ்ச்சியைத் தடை செய்ததா, தமிழ்நாடு அரசு?. பக்தர்கள் வசதிக்காக – வழிபாட்டிற்காக, கோவில் சம்பிரதாயப்படி ''தீபம்'' ஏற்றவேண்டிய நாளில், முறையாக அங்கே ஏற்றிவிட்ட நிகழ்ச்சிக்கு ஏதாவது தடை – இடையூறு ஏற்பட்டதா? அதற்கு அரசால் ஏதாவது தடை விதிக்கப்பட்டதா?.

நாவடக்கமின்றிப் பேசும் இப்படிப்பட்ட ஆணவப் பேச்சுக்கு, நீங்கள் கொடுக்க வேண்டிய விலை மிக அதிகமாக இருக்கும் என்பதை நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் புரிய வைக்கும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகள் கணக்கெடுப்பு பணி 5ந்தேதி தொடக்கம்

சென்னை, ஜன.3

நாட்டின் தேசிய விலங்கான புலிகள் கணக்கெடுப்பு பணி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது. தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம்,

இந்திய வன விலங்குகள் நிறுவனம் ஆகியவை வனத்துறையுடன் இணைந்து நாடு முழுவதும் இந்த கணக்கெடுப்பு பணியை மேற்கொள்வது வழக்கம். அதன்படி கடந்த 2022ம் ஆண்டு புலிகள் கணக்கெடுப்பு பணி நடைபெற்றது. இதில் நாடு முழுவதும் 3,167 புலிகள் இருப்பது கண்டறியப்பட்டது.

தமிழ்நாட்டில் கடந்த 2018ம் ஆண்டு நடைபெற்ற கணக்கெடுப்பில் 264 புலிகள் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டது. 2022ம் ஆண்டு கணக்கெடுப்பில் புலிகள் எண்ணிக்கை 306 ஆக அதிகரித்தது.

இந்த நிலையில் நாடு முழுவதும் புலிகள் கணக்கெடுப்பு பணி வருகிற 5ந்தேதி தொடங்கி பிப்ரவரி மாதம் 28ம் தேதி வரை நடைபெற உள்ளது. ஒவ்வொரு கட்டமும் 7 நாட்கள் சுழற்சி முறையில் வெவ்வேறு கோட்டங்களில் நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் உள்ள சத்தியமங்கலம், பவானிசாகர், விளாமுண்டி, டி.என். பாளையம், கடமபூர், கேர்மாளம், ஆசனூர், தலமலை, தாளவாடி உள்ளிட்ட வனப்பகுதிகளில் மட்டும் இப்பணி கடந்த 29ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

களக்காடு முண்டந்துறை, ஆனைமலை, முதுமலை, மேகமலை ஆகிய புலிகள் காப்பகம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, கோவை, திண்டுக்கல், கொடைக்கானல், தேனி, மதுரை, அம்பாசமுத்திரம், தென்காசி, கன்னியாகுமரி, ஈரோடு அசனூர், தர்மபுரி, ஓசூர், கூடலூர், நீலகிரி, முக்கூர்த்தி, சேலம், நாமக்கல், ஆத்தூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், வேலூர் ஆகிய இடங்களில் உள்ள வனச்சரக பகுதிகள் மற்றும் புலிகள் நடமாட்டம் உள்ள இடங்களில் கணக்கெடுப்பு பணி நடைபெற உள்ளது.

புலிகள் எச்சம், கால்தடம் போன்றவற்றை நவீன கண்காணிப்பு மூலம் பதிவு செய்யப்படும். புலிகள் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட விரும்பம் உள்ள தன்னார்வலர்கள் வனத்துறை அலுவலகங்களில் தங்களது பெயரை பதிவு செய்துக்கொள்ளலாம் என்று வனத்துறை சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# குரோம்பேட்டை ராதாநகர் சுரங்கப்பாதை 7ம் தேதி திறப்பு




சென்னை, ஜன.3

குரோம்பேட்டையில் உள்ள ராதாநகர் மெயின்ரோடு ஜி.எஸ்.டி. சாலையுடன் இணைக்கும் முக்கிய பாதையாக உள்ளது. இந்தபாதைரெயில்வே கேட்டை கடந்து செல்லும் வகையில் உள்ளதால் ரெயில்வே கேட் மூடப்படும் போது கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வந்தது.

இதை கருத்தில் கொண்டு கடந்த 2007ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின் போது சுரங்கப்பாதை அமைக்க திட்டமிடப்பட்டது. அப்போது பல்லாவரம் நகராட்சி தலைவராக இருந்த இ. கருணாநிதி மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றினார். இதை தொடர்ந்து ராதாநகர் சுரங்கப்பாதைக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அடிக்கல் நாட்டினார். அதன் பிறகு ரெயில்வே பகுதியில் பணிகள் முடிந்த நிலையில் நெடுஞ்சாலைத் துறைக்கு உட்பட்ட பகுதியில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக முடிவடையாமல் இழுபறியில் இருந்தது.

அ.தி.மு.க. ஆட்சியின் போது ராதாநகர் சுரங்கப்பாதை பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி பலமுறை சட்டமன்றத்தில் பேசினார். சென்னை உயர் நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்தார். இதைத் தொடர்ந்து அ.தி. மு.க. ஆட்சியில் அந்த பகுதியில் சுரங்கப்பாதைக்கு தேவைப்படும் நிலங்களை நில ஆர்ஜிதம் செய்து இழப்பீடுகள் வழங்கி பணிகள் வேகப்படுத்தப் பட்டன.2019ம் ஆண்டு சுரங்கப் பாதை திட்டத்திற்கான பணிகளை துவக்க வசதியாக 46 கட்டிடங்கள் இடிக்கப்பட்டன.

அதன் பிறகு நெடுஞ்சாலை துறை பணிகள் மிக மந்தமாக நடந்தது. பின்னர் இந்த சுரங்கபாதையை இருவழிப் பாதையாக பயன்படுத்தும் வகையில் கார்கள் செல்லும் விதமாக இப்போது உருவாக்கப்பட்டு உள்ளது. ஆனாலும் ஜி.எஸ்.டி. மெயின் ரோட்டில் கார்கள் திரும்புவதற்கு வசதியாக 3 அடி அகலம் 30 அடி நீளத்திற்கு இப்போது ரெயில்வே நிலம் ஒதுக்கி கொடுத்து உள்ளது. அதன் அடிப்படை யில் அனைத்து பணிகளும் நடந்து முடிந்து இப்போது திறப்பு விழாவுக்கு தயாராக உள்ளது.

15 ஆண்டு கால இழுபறிக்கு பிறகு ரூ.32 கோடி செலவில் உருவாக்கப்பட்டு உள்ள ராதாநகர் சுரங்கப் பாதை வருகிற 7ந்தேதி (புதன் கிழமை) திறக்கப் அறிவிக்கப்பட்டு உள்ளது. 7ந்தேதி மாலை துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சென்று ராதாநகர் சுரங்கப் பாதையை திறந்து வைக்கிறார். அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்ட மன்ற உறுப்பினர் இ.கருணா நிதி மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் இதற்கான முன்னேற்பா டுகளை செய்து வருகின்றனர்.

இந்த சுரங்கப்பாதை திறக்கப்படுவதின்மூலம் குரோம்பேட்டை ராதாநகர், பாரதிபுரம், நெமிலிச்சேரி. அஸ்தினாபுரம் பகுதிகளை சேர்ந்த 1 லட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் அடைவார்கள்.

# கொலை முயற்சி வழக்கில் வாலிபர் குண்டர் சட்டத்தில் கைது

திருநெல்வேலி, ஜன.3

திருநெல்வேலி தச்சநல்லூர், ஊருடையான்குடியிருப்பு, அம்மன் கோவில் தெருவை சேர்ந்த வெள்ளாண்டி மகன் வேல்பிரபாகரன்(எ) பிரபா (வயது 25) என்பவர் திருநெல்வேலி மாநகரம், தச்சநல்லூர் பகுதியில் கொலை முயற்சி, பொதுமக்களை அச்சுறுத்தல் வழக்குகளில் சம்பந்தப்பட்டு,

பொதுஒழுங்குபராமரிப்பிற்குகுந்தகம்விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டு வந்தார்.

இதனையடுத்து அந்த வாலிபர் திருநெல்வேலி மாநகர போலீஸ் துணை கமிஷனர் (மேற்கு) பிரசண்ணகுமார், போலீஸ் உதவி கமிஷனர் (சந்திப்பு சரகம்) சரவணன், தச்சநல்லூர் சட்டம் மற்றும் ஒழுங்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் பத்மனாபபிள்ளை ஆகியோரின் பரிந்துரையின் பேரில் திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணி உத்தரவுபடி நேற்று குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டார்.

# அதிமுக சார்பில் போட்டியிட 10,175 பேர் விருப்ப மனு



சென்னை ஜன.3

அதிமுக சார்பில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட விரும்புவர்களிடம் கடந்த 15ம் தேதி முதல் விருப்ப மனுக்கள் வாங்கும் பணி நடைபெற்றது. 25ம் தேதி வரை இந்த பணிகள் நடந்து முடிந்த நிலையில், கட்சியினரின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த 28ம் தேதி முதல் மீண்டும் விருப்ப மனுக்கள் பெறப்பட்டன. கடந்த 4 நாட்களாக அதிமுக நிர்வாகிகள் தலைமைக்கழகத்தில் விருப்ப மனுக்களை வாங்கி விண்ணப்பித்து அளித்தனர். நேற்று விருப்ப மனு வாங்குவதற்கு கடைசி நாள் என்பதால் கட்சி அலுவலகத்தில் நிர்வாகிகள் பலரும் திரண்டு விருப்ப மனுக்களை வாங்கி விண்ணப்பித்தனர்.

இந்தநிலையில், அதிமுக தலைமை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அதிமுக சார்பில் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா சட்டமன்ற தேர்தலில் போட்டியிட 10,175 விருப்ப மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தங்களது தொகுதியில் போட்டியிட வேண்டுமெனெ 2,187 விருப்ப மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் 7வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்ட இடைநிலை ஆசிரியர்கள் கைது



சென்னை, ஜன.3

சமவேலைக்கு சம ஊதியம் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, தொடக்க பள்ளிகளில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்கள், சென்னையில் கடந்த சில நாட்களாக தொடர் போராாட்டம் நடத்தி வருகின்றனர். சென்னை எழும்பூர் காந்தி இர்வின் சாலை அருகே, வட்டார கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்று 6வது நாளாக போராட்டம் நடத்தினர். காந்தி இர்வின் மேம்பாலத்தின் ஒருபுறத்தில், இடைநிலை ஆசிரியர்கள் அமர்ந்து போராட்டம் நடத்தினர். தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பினர்.

இந்த நிலையில், தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி புத்தாண்டு தினமான இன்றும் 7வது நாளாக ஆசிரியர்கள்போராட்டம்நடத்தி வருகின்றனர். கடந்த தேர்லில் திமுக கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று முழக்கமிட்டு ஆசிரியர்கள் போராடி வருகின்றனர். போராட்டத்தைக் கட்டுப்படுத்த எழும்பூரில் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, போராட்டத்தை கைவிட மறுத்த இடைநிலை ஆசிரியர்களை போலீசார் கைது செய்தனர். எனினும், தங்களது கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அவர்கள் தெரிவித்தனர். ஆசிரியர்களின் தொடர் போராட்டம் காரணமாக அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# சாலையில் நடந்து சென்ற பெண்ணிடம் பாலியல் சீண்டல் அரசு ஊழியர் கைது

சென்னை ஜன.3

சென்னை மயிலாப்பூரை சேர்ந்தவர் ஆஸ்டின் (47 வயது).

இவர் தமிழ்நாடு ‘காதி கிராப்ட்’ நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்கிறார். இவர்கடந்த 28ந்தேதி இரவு சென்னை சாந்தோம் பகுதியில் பைக்கில் சென்று கொண்டிருந்தார். அப்போது சாலையில் தனியாக நடந்து சென்ற இளம் பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக தெரிகிறது.

இதுதொடர்பாக, அந்த இளம்பெண் ஆன்லைன் மூலமாக மயிலாப்பூர் போலீஸ் நிலையத்துக்கு புகார் மனு அனுப்பினார். அதன் அடிப்படையில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர்.

சம்பவம் நடந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்ததில் ஆஸ்டின் குறிப்பிட்ட பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டது உறுதியானது.

அதன்பேரில், நேற்று அவரை போலீசார் கைது செய்தனர்.

# போராட்டத்தில் ஈடுபட்ட 1,385 ஆசிரியர்கள் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு



சென்னை, ஜன.3

‘சம வேலைக்கு சம ஊதியம்’ என்ற ஒற்றைக் கோரிக்கையை வலியுறுத்தி இடைநிலை ஆசிரியர்கள் சில ஆண்டுகளாக தொடர்ந்து போராட்டத்தை நடத்தி வருகின்றனர். தங்கள் கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்று கோரி, ஆசிரியர்கள் போராட்டத்தை மீண்டும் தொடங்கினர்.

அந்த வகையில் மாணவர்கள் பாதிக்காத வகையில் பள்ளி அரையாண்டு விடுமுறை நாட்களில் இடைநிலை ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்தை கடந்த 26ந்தேதி முதல் நடத்தி வருகிறார்கள். இதன் தொடர்ச்சியாக 6வது நாளாக நேற்று சென்னை நுங்கம்பாக்கம் டி.பி.ஐ. நுழைவுவாயில் முன்புசாலையில்அமர்ந்து போராட்டம் நடத்தினர். இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட 1,000 பெண்கள் உள்பட 1,500க்கும் மேற்பட்டோரை போலீசார் கைது செய்தனர்.

அப்போது சிலர் முரண்டுபிடித்ததால், அவர்களை குண்டுக்கட்டாக தூக்கி போலீசார் கைது செய்த நிகழ்வும் அரங்கேறியது. கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள், சமுதாய நலக்கூடம், மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் மாலையில் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், சென்னை நுங்கம்பாக்கத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் 1,385 பேர் மீது 3 பிரிவுகளின் கீழ் நுங்கம்பாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அனுமதியின்றி கூடுதல், அமைதிக்கு குந்தகம் விளைவித்தல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# 2025ம் ஆண்டில் திருப்பதி லட்டு விற்பனை அமோகம்





திருப்பதி, ஜன.3

2025ம் ஆண்டில் திருப்பதி ஏழுமலையான் கோவில் லட்டு விற்பனை குறித்த அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் வெளியாகியுள்ளன. திருமலை திருப்பதி தேவஸ்தானம் (TTD) வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 2025ஆம் ஆண்டில் மொத்தம் 13.52 கோடி லட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டுகளை விட மிகப்பெரிய வளர்ச்சியாகக் கூறப்படுகிறது. 2024ம் ஆண்டில் மொத்த லட்டு விற்பனை 12.15 கோடியாகவும், 2025ல் 13.52 கோடியாகவும் உள்ளது. இது, 1.37 கோடி அதாவது 10 சதவீதம் அதிகளவு விற்பனையாகும். இதேபோல், 2024ம் ஆண்டில் 2.55 கோடியாக இருந்த பக்தர்களின் வருகை, 2025ம் ஆண்டில் 2.70 கோடியாக அதிகரித்துள்ளது.

கடந்த டிசம்பர் 27, 2025 அன்று ஒரே நாளில் மட்டும் 5.13 லட்சம் லட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இது கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத ஒரு நாள் சாதனையாகும். பக்தர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய, ஒரு நாளைக்குச் சராசரியாக 4 லட்சம் லட்டுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விசேஷ நாட்களில் இது 8 முதல் 10 லட்சம் வரை அதிகரிக்கப்படுகிறது.

2024ல் எழுந்த நெய் கலப்பட சர்ச்சைகளுக்குப் பிறகு, 2025ல் தரக் கட்டுப்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டன.

புதிய ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு, லட்டுகளின் தரம் உறுதி செய்யப்பட்டதால் பக்தர்களின் நம்பிக்கை மற்றும் வரவேற்பு அதிகரித்துள்ளதாகத் தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
3.1.2026

# நாட்றம்பள்ளி ஒன்றியம் சங்கராபுரம் ஊராட்சியில் மாவட்டத்திட்ட இயக்குனர் ஆய்வு



திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி ஒன்றியம் சங்கராபுரம் ஊராட்சியில்பல்வேறுதுறைகளின் கீழ் நடந்து வரும் திட்ட பணிகளை மாவட்ட திட்ட இயக்குனர் திருமதி S.உமாமகேஸ்வரி அவர்கள் ஆய்வு செய்தார்கள் அதுசமயம் உதவி பொறியாளர் அவர்கள் ஒன்றிய பனி மேற்பார்வையாளர் அவர்கள் ஊராட்சி மன்ற தலைவர் அவர்கள் ஊராட்சி செயலர் ஊராட்சி பனியாளர்கள் அனைவரும் உடன் இருந்தனர்.



மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் இன்று(02.01.2026) மதுரை மாவட்டம்,திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் வடகரை ஊராட்சியில் உள்ள ஊரணி தூர்வாரப்பட்டு, மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்பட்டு வருவதை பார்வையிட்டார்

# சென்னையில் கரை ஒதுங்கிய புளூ டிராகன் மீன் நிபுணர்கள் எச்சரிக்கை

சென்னை, ஜன.3

சென்னை காசிமேடு கடற்கரையில் ஆபத்தான புளூ டிராகன்கள் கரை ஒதுங்கியது. கடல் வாழ் உயிரினமான புளூ டிராகன் கடித்தால் வலி ஏற்படுவதுடன் வீக்கம், குமட்டல், ஒவ்வாமை உள்ளிட்டவை ஏற்படும் எனநிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இருப்பினும் கரை ஒதுங்கிய புளூ டிராகன் மீன்களை பார்க்க ஏராளமான பொதுமக்கள் கூடினர். கடந்த ஆண்டு ஸ்பெயினில் இதே போன்று புளூ டிராகன் மீன்கள் கரை ஒதுங்கியபோது கடற்கரை தற்காலிகமாக மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சென்னை அருகே பெண் வி.ஏ.ஓ. விஷம் குடித்து தற்கொலை

சென்னை ஜன.3

சென்னை, பொன்னேரி அடுத்த தேவம்பட்டு அகரம் பகுதியைச்சேர்ந்தவர்அருணா(வயது27). இவர்தேவம்பட்டு அருகில் உள்ள கீரப்பாக்கம் கிராமத்தில் வீ.ஏ.ஓ.வாக வேலை பார்த்து வந்தார். நேற்று முன்தினம் வீட்டில் இருந்த போது திடீரென அருணா விஷம் குடித்து மயங்கினார். இதனையடுத்து அவருக்கு சென்னைஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் இன்று சிகிச்சை பலனின்றி அருணா பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து திருப்பாலைவனம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஈரோட்டில் விபத்து



சேலத்தில் இருந்து குடும்பத்துடன் வளைகாப்பு நிகழ்ச்சிக்காக குடும்பத்தினர் சென்ற டூரிஸ்ட் பஸ் பெருந்துறை விஜயமங்கலம் அருகே லாரி மீது உரசி கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது, அதிர்ஷ்டவசமாக யாருக்கும் எந்த ஒரு உயிர் சேதமும் ஏற்படவில்லை பேருந்தில் பயணித்த நபர்களுக்கு சிறு காயங்களுடன் பெருந்துறை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது...

# இன்றைய ராசி பலன்கள் (3.1.2026)




புத்தாண்டு உங்களுக்கு உற்சாகத்துடன் தொடங்கும். நிலுவையில் இருந்த வேலைகள் விரைந்து முடியும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய முயற்சிகள் கைகூடும். பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும்.




நிதானமாகச் செயல்பட வேண்டிய நாள். தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படலாம். குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். பிற்பகலுக்குப் பின் சுபச் செய்திகள் வந்து சேரும்.




தொழில் ரீதியாகப் பெரிய மாற்றங்கள் ஏற்படும். எதிர்பார்த்த பதவி உயர்வு அல்லது இடமாற்றம் கிடைக்க வாய்ப்புள்ளது. கணவன்மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும்.




வெற்றிகள் தேடி வரும் நாள். எடுத்த காரியங்களைச் சிறப்பாக முடிப்பீர்கள். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். ஆரோக்கியம் மேம்படும். நண்பர்களின் உதவி சரியான நேரத்தில் கிடைக்கும்.




மனதில் தெளிவும் துணிச்சலும் பிறக்கும். பூர்வீக சொத்து விவகாரங்களில் சாதகமான தீர்ப்பு வரும். உறவினர்களுடன் இருந்த கசப்புகள் நீங்கும். பணவரவு திருப்தி தரும்.




நிச்சயமற்ற நிலை மாறி தெளிவு பிறக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சி தரும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். ஆன்மீகப் பயணங்கள் செல்ல நேரிடலாம்.




சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் கைகூடும். வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் லாபம் குறையாது. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் திட்டமிடப்படும்.




பேச்சில் நிதானம் தேவை. தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் அதிகரித்தாலும், அதற்குரிய வருமானமும் வரும். கடின உழைப்பால் இலக்குகளை அடைவீர்கள்.




ராசிநாதன் குருவின் ஆசியால் எதிலும் வெற்றி காண்பீர்கள். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிநாடு செல்லும் முயற்சிகள் பலிதமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும்.




பொறுமையைக் கையாள வேண்டிய நாள். வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். கடன் சுமைகள் குறைய வாய்ப்புள்ளது. உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம்.




வருமானம் உயரும். திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும்.




உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். மனதுக்கு இனிய சம்பவங்கள் நடைபெறும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும்.

# தவெக கூட்டணிக்கு விசிக வருமா? செங்கோட்டையன் பதில்

சென்னை, ஜன.3



திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில் பகுதியில்தவெக அலுவலகம் திறப்பு விழா இன்று நடைபெற்றது. இந்த விழாவில் அக்கட்சியின் நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் பங்கேற்று அலுவலகத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் யார் யார் தவெகவிற்கு வருகிறார்கள் என்பதை இப்போது கூற இயலாது. வெளிப்படையாக கூறினால் அங்கே பிடித்து வைத்துக்கொள்வார்கள். பொங்கலுக்குள் அவர்களை தவெகவில் இணைப்பதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. ஓபிஎஸ், டிடிவி தினகரன் தெளிவாக இருக்கின்றனர்.

எடப்பாடி பழனிசாமி மீண்டும் அழைத்தாலும் ஓபிஎஸ் அதிமுகவிற்கு செல்ல மாட்டார். ஆனால் அழைக்க வாய்ப்பில்லை, இதனை மற்றவர்கள் புரிந்து கொண்டால் சரி. டிடிவி, ஓபிஎஸ் தவெக கூட்டணியில் இணைவது விரைவில் நடைபெறும். திமுக கூட்டணி கட்சிகளுக்குள் சலசலப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. விசிகதவெககூட்டணிக்கு வருகிறதோஇல்லையோ, அக்கட்சியின் தொண்டர்கள் அத்தனை பேரும் இங்கு தவெகவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்” என்று கூறினார்.

# ‘எனக்கு உங்கள் மகள் வயது...’ அநாகரீகமாக நடந்து கொண்டவருக்கு மேடையில் இருந்தே பதிலடி கொடுத்த பாடகி



அரியானா மாநிலத்தை சேர்ந்த பிரபல பாடகி பிரன்ஜால் தஹியா. இவர் அரியான்வி மொழியில் பல்வேறு பாடல்களை பாடியுள்ளார். இவரது இசைக் கச்சேரிகளுக்கு ஆயிரக்கணக்கான ரசிகர்கள் வருகை தருகின்றனர்.

அந்த வகையில் சமீபத்தில் பிரன்ஜால் தஹியா பங்கேற்ற ஒரு இசை நிகழ்ச்சியில், ஒரு சிலரின் அநாகரீக செயல்களுக்கு மேடையில் இருந்தவாறே பிரன்ஜால் பதிலடி கொடுத்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. குறிப்பிட்ட அந்த நிகழ்ச்சின்போது ரசிகர்கள் கூட்டத்தில் இருந்த சில நபர்கள் அநாகரீகமான முறையில் நடந்து கொண்டதாகவும், சிலர் மேடையில் ஏற முயன்றதாகவும் கூறப்படுகிறது.

மேடையில் பாட்டு பாடிக்கொண்டிருந்த பிரன்ஜால், இத்தகைய செயல்பாடுகளைக் கண்டு பாடலை இடையிலேயே நிறுத்தினார். அப்போது பேசிய அவர், “உங்கள் மகளோ, சகோதரியோ இங்கு நின்று கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். எனவே ஒழுங்காக நடந்து கொள்ளுங்கள்” என்றார்.

மேலும் கூட்டத்தில் இருந்த ஒரு நபரை குறிப்பிட்டு காட்டி, “எனக்கு உங்கள் மகள் வயது இருக்கும். தயது செய்து கட்டுப்பாடாக இருங்கள்” என்று காட்டமாக கூறினார். அதோடு நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்துவதற்கு ரசிகர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவிய நிலையில், பாடகியின் துணிச்சலான செயலுக்கு இணையவாசிகள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# ரியோவின் “ராம் இன் லீலா” படப்பிடிப்பு வீடியோ வெளியீடு




கடந்த 2019ல் வெளியான 'நெஞ்சமுண்டு நேர்மையுண்டு ஓடு ராஜா' படத்தில் ஹீரோவாக கதாநாயகனாக தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் ரியோ ராஜ். அதனை தொடர்ந்து 'பிளான் பண்ணி பண்ணனும், ஜோ, ஸ்வீட் ஹார்ட்' ஆகிய படங்களில் நடித்து மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றார். இவரது நடிப்பில் சமீபத்தில் ஆண்பாவம் பொல்லாதது என்ற படம் வெளியானது. கலையரசன் தங்கவேல் இயக்கியிருந்த இந்த படத்தில் மாளவிகா மனோஜ் நாயகியாக நடித்திருந்தார். கணவன் மனைவி உறவை மையமாக வைத்து வெளியான இந்த படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

நடிகர் ரியோ ராஜ் ‘ராம் இன் லீலா’ படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தினை அறிமுக இயக்குநர் ராம்சந்திரன் கண்ணன் இயக்க உள்ளார். இப்படத்திற்கு அங்கித் மேனன் இசையமைக்கிறார். கதாநாயகியாக வர்திகா நடிக்க உள்ளார். இப்படம் காதல் கதைக்களத்தில் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரியோ ராஜ் தன் பெயரை ரியோவாக மாற்றியுள்ளார். இந்நிலையில், ‘ராம் இன் லீலா’ படப்பிடிப்பு வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இப்படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது.

# தன்னடக்கத்துடன் இருங்கள் நடிகை ரீமா கல்லிங்கல்



மலையாளத்தில் முன்னணி கதாநாயகியாக ரீமா கல்லிங்கல் உள்ளார். இவர் தமிழில் ‘யுவன்யுவதி’ படத்தில்கதாநாயகியாகநடித்துள்ளார், கேரளாவில்நடிகை மீதான பாலியல் தொல்லை சம்பவத்தையடுத்து நடிகைகள் ரீமா கல்லிங்கல், மஞ்சுவாரியர், பூ பார்வதி, ரம்யா நம்பீஸன் உள்ளிட்ட பல நடிகைகள் இணைந்து பெண்கள் பாதுகாப்பு அமைப்பு ஒன்றை உருவாக்கி செயல்பட்டு வருகின்றனர்.

இயக்குநர் ஆஷிக் அபுவை திருமணம் செய்த இவர் தனியாக ஒரு நடன பள்ளியையும் நடத்தி வருகிறார். தயாரிப்பாளராகவும் நடிகையாகவும் இருக்கும் ரீமா கல்லிங்கல் பயணத்தின் மீது மிகவும் விருப்பம் கொண்டவராக இருக்கிறார். கடைசியாக இவரது நடிப்பில் 2025ல் ‘தியேட்டர்’ திரைப்படம் வெளியானது.

இந்நிலையில், ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வாழ்க்கைத்தத்துவம் குறித்து பதிவிட்டுள்ளார். அதில் “தன்னடக்கத்துடன் இருங்கள்! காடு உங்களின் இடத்தை காட்டும்... பெரிய படத்துடன் தொடங்குவது ஒரு நல்ல விஷயம். காட்டுப் பகுதியில் உள்ள சிம்மினி அணையின் மத்தியில் இருந்து இந்த ஆண்டு தொடங்குகிறது.அழகான, அமைதியான இந்த இடம் உங்களுக்கு உத்வேகம் ஊட்டும். கூடுதல் புகைப்படங்களை விரைவில் பதிவிடுவேன்” என கூறியுள்ளார்.

நடிகை ரீமா நடிப்பில் ‘தி மித் ஆப் ரியாலிட்டி’ என்ற படத்தில் தென்னை மரத்தில் ஏறும் காட்சிகள் இடம் பெற்றது. இந்த போஸ்டர் வெளியாகி ரீமாவுக்கு எதிராக சமூக வலைதளங்களில் டிரோல்கள் எழுந்தது.

# உள்ளூர் கிரிக்கெட்டில் விராட், ரோகித் விளையாடியதால்தான்... அஸ்வின்



33வது விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் எலைட் பிரிவில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன.இந்த தொடரில் இந்திய அணியின் நட்சத்திர வீரர்கள் விராட் கோலி, ரோகித் சர்மா விளையாடினர். டெல்லி அணிக்காக விராட் கோலியும், மும்பை அணிக்காக ரோகித் சர்மாவும் விளையாடி அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தனர்.

இந்த நிலையில், விஜய் ஹசாரே கோப்பை தொடரில் விராட் கோலி, ரோகித் சர்மா விளையாடியது பற்றி முன்னாள் வீரர் அஸ்வின் கூறியதாவது,

2027 உலகக் கோப்பைக்கு பிறகு ஒருநாள் போட்டி எதிர்காலம் குறித்து எனக்கு சந்தேகம் இருக்கிறது. டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு இன்னும் இடம் இருக்கிறது. ஆனால் ஒருநாள் கிரிக்கெட்டுக்கு அந்த இடம் இல்லை என நினைக்கிறேன்.

விஜய் ஹசாரே கோப்பை என்பது பொதுவாக அதிகமானோர் பின்தொடராத ஒரு உள்நாட்டு போட்டி. ஆனால் விராட், ரோகித்விளையாடியதால் தான் மக்கள் அதை கவனித்தனர்.

விளையாட்டு என்பது எப்போதும் தனிநபர்களை விட பெரியது என்பது நமக்குத் தெரியும். ஆனால் சில நேரங்களில், விளையாட்டை தொடர்புடையதாக வைத்திருக்க, இத்தகைய வீரர்கள் மீண்டும் வர வேண்டிய நிலை உருவாகிறது.அப்படியானால், அவர்கள் ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து விலகினால் என்ன நடக்கும் ? . என தெரிவித்தார்.

# விஜய் ஹசாரே கோப்பை: ஐதராபாத் அணியை வீழ்த்தி பரோடா வெற்றி



33வது விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் எலைட் பிரிவில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. இதில் ராஜ்கோட்டில் நடைபெற்ற ஆட்டத்தில் ஐதராபாத் பரோடா அணிகள் மோதின.

அதன்படி, முதலில் பேட் செய்த பரோடா அணியில் சிறப்பாக விளையாடி அமித் பாஸி, நித்யா பாண்டியா இருவரும் சதமடித்து அசத்தினர். அமித் பாஸி 127 ரன்களும், நித்யா பாண்டியா 122 ரன்களும் எடுத்தனர்.

இதனால் 50 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 417 ரன்கள் எடுத்தது. தொடர்ந்து 418 ரன்கள் இலக்குடன் களமிறங்கிய ஐதராதபாத் அணி 49.5 ஓவர்களில் 380 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அந்த அணியில் அபிரத் ரெட்டி , பிரானே ரெட்டி ஆகிய இருவரும் சதமடித்தனர். இருப்பினும் ஐதராபாத் அணியால் இலக்கை எட்ட முடிவில்லை.

இதனால் 37 ரன்கள் வித்தியாசத்தில் பரோடா அணி வெற்றி பெற்றது.

# பாலஸ்தீன கொடி ஒட்டிய ஹெல்மெட் உடன் விளையாடிய காஷ்மீர் வீரர் போலீசார் விசாரணை



ஜம்மு காஷ்மீரில் நடந்த உள்ளூர் கிரிக்கெட் போட்டியின் போது வீரர் ஒருவர் பாலஸ்தீன கொடியைப் பயன்படுத்தியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.'ஜம்மு காஷ்மீர் சாம்பியன்ஸ் லீக்கில்' ஒரு போட்டியில் விளையாடும்போது புர்கான் பட் என்ற வீரர் தனது ஹெல்மெட்டில் பாலஸ்தீனக் கொடியை ஒட்டி விளையாடினார்.இது பெரும் சர்ச்சையை ஏற்ப்படுத்தியது.

இந்த நிலையில், இது தொடர்பாக விசாரணைக்கு ஆஜராக புர்கான் பட்க்கு போலீசார் சம்மன் அனுப்பியுள்ளனர். மேலும், ஏற்பாட்டாளர் ஜாஹித் பட் மற்றும் போட்டிக்கு மைதானத்தை வழங்கிய நபரிடமும் விசாரணை நடைபெற்று வருகிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066